



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட கண்டோன்மென்ட் பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துறை வாரியாக அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டு, கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.





திரைப்பட பாடல் ஆசிரியர் கருணாகரனின் தந்தையும், கழக மகளிர் அணியின் இராயபுரம் பகுதி முன்னாள் அமைப்பாளர் மறைந்த திருமதி.ல.பரமேஸ்வரி அவர்களின் கணவருமான லட்சுமணன் உடல் நலக்குறைவால் மறைந்ததையொட்டி அவரது இல்லத்திற்கு துணை முதலமைச்சரும், இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.10.2025) நேரில் சென்று, திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபிநேசர். நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா.இளைய அருணா உள்பட கழக நிர்வாகிகள். குடும்பத்தினர் உள்ளனர்.

### கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு

# தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரங்கல் தீர்மானம்!

### மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்பு!

சென்னை, அக். 15 - தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று காலை 9.30 மணியளவில் கூடியதும்,முதல் நிகழ்வாக,சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவர்களைப் பற்றிய இரங்கல் குறிப்புகள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களால் படிக்கப்பட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து கரூரில்,27.9.2025 அன்று நடைபெற்ற பரப்புரை ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் உயிர் நீத்த 41 பேருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

முன்னாள் உறுப்பினர்கள் ச.புரட்சிமணி, சு.குணசேகரன், வி.சே.கோவிந்தசாமி, ஓ.எஸ்.அமர்நாத், ஆ.அறிவழகன், துரை அன்பழகன் என்கிற இராமலிங்கம், ம.அ.கலிலூர் ரகுமான் மற்றும் இரா.சின்னசாமி ஆகியோர் பற்றிய இரங்கல் குறிப்புகளை பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்கள் வாசித்தார்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், முதுபெரும் அரசியல் தலைவர் மற்றும் நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் மறைந்த பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் தீர்மானங்களை வாசித்த பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், உறுப்பினர்களும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து, வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

பேரவையின் முதல் நாள் கூட்டத் தொடரில் இரங்கல் குறிப்புகளும் இரங்கல் தீர்மானங்களும் நிறைவேற்றிய பின்னர், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் கூட்டம் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இந்தக் கூட்டத் தொடர் அக்.15,16,17 ஆகிய நாட்கள் நடைபெறுகின்றன.

### தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர்

## பேராசிரியர் ஜெயரஞ்சன் மாமனார் என்.நாகராஜன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக். 15 - தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சனின் மாமனார் என்.நாகராஜன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களது மாமனார் என்.நாகராஜன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் ஜெயரஞ்சன் மற்றும் அவரது துணைவியார் திருமதி ராணி ஜெயரஞ்சன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்,சுதர்சனம் எம்,எல்,ஏ,, அறிவிப்பு!




சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., எனது தலைமையில், மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மாநில சமூக வளைதள பொறுப்பாளர் ப.மீ.யாழினி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமலவள்ளி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்மு ஆகியோர் முன்னிலையில் இன்று (15.10.2025 - புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாதவரத்தில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.,**
செயலாளர் - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரு.செயல்மணி
### அக்டோபர் 15 (2014)



**1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.**

**“1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்” என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி” எனவும்;**

**இரங்கல் செய்தியில் “இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன் ?” என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 113வது வட்டத்தைச் சேர்ந்த நுங்கை எஸ்.சுரேஷ் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்-14.10.2025

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### மதுரை வடக்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழி மொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செய லாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 14.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நிலக்கோட்டை ஆ. முனியாண்டி
### அக்டோபர் 15 (1992)



**தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.**

**திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**